# டிபிகேஎல் துணை இயக்குநர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

ஷா ஆலம், ஆக. 17 -

லைசென்ஸ் இல்லாத கேளிக்கை மையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்காக, ஒரு நபரிடம் பேரம் பேசி லஞ்சம் வாங்கியதாக, கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகத்தின் (டிபிகேஎல்) ஓர் இலாகாவின் துணை இயக்குநர் மற்றும் ஓர் அமலாக்க அதிகாரி மீது குற்றம் சுமத்தப்பட்டது.

தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து அவ்விருவரும் விசாரணை கோரினர். ஷா ஆலம் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி அனித்தா ஹரூண் முன்னிலையில் குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டபோது, டிபிகேஎல் அமலாக்கப் பிரிவின் துணை இயக்குநரான இர்வான் அப்துல்லா (வயது 44) மற்றும் அமலாக்க அதிகாரி ஸஹாரி முஹமட் (வயது 34) ஆகிய இருவரும் அவற்றை மறுத்தனர்.

அந்த நபரின் பாதுகாப்பின் கீழ் இருக்கும் லைசென்ஸ்சுகள் இல்லாத கேளிக்கை மையங்களுக்கு எதிராக அமலாக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு கைமாறாக, மாதம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் வெள்ளியை லஞ்சமாக கொடுக்குமாறு, கடந்த பிப்ரவரி மாதத்தில் அவர்கள் இருவரும் கோரியிருந்ததாக முதல் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

அதே பிப்ரவரி மாதத்தில், அந்த கேளிக்கை மையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததற்கு கைமாறாக, மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் வெள்ளியைப்பெற அவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டதாக இரண்டாவது குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டு வரைக்குமான சிறை மற்றும் அபராதம் விதிக்க வகை செய்யும் 2009-ஆம் ஆண்டு மலேசிய லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையச் சட்டத்தின் செக்ஷன் 16(எ)(ஏ) கீழ் இக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த ஜூன் 5ஆம் தேதி, சிலாங்கூர், பூச்சோங்கில் உள்ள ஓர் உணவகத்தில் அதே நபரிடமிருந்து ஒரு லட்சத்து 30 ஆயிரம் வெள்ளியை லஞ்சமாகப் பெற்றதாக இர்வான் அப்துல்லா மீது தனியாக குற்றம் சுமத்தப்பட்டது.

இர்வானையும் ஸஹாரியையும் தலா 15 ஆயிரம் வெள்ளி ஜாமீனில் விடுவித்த நீதிமன்றம், தங்களின் கடப்பிதழ்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் அவர்களுக்கு உத்தரவிட்டது. இவ்வழக்கின் மறுசெவிமடுப்பு வரும் செப்டம்பர் 30ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

